DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 124/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : உமாமகேஸ்வரி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 20.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 20th November 2025.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் காவல்துறையில் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். நான் தறபோது இல்லத்தரசியாக இருக்கிறேன். இதற்கு முன்பு சங்கரன்கோவில் நகர் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்தபோது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து 14.02.2015ம் தேதி அதிகாலை 3.45 மணிக்கு எனக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் திருநெல்வேலி அரசு மருத்துவமனை சென்று காலை 5.30 மணிக்கு அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கோமதி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று காலை 8 மணிக்கு நிலையம் திரும்பி அதன் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.98/2015 ச/பி.294(பி), 324, 506(2) இதச படி வழக்கு பதிவுசெய்தேன். அதன் அசலையும், புகார் வாக்குமூலத்தையும் கனம்

நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் மற்றொரு நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

முதல் தகவல் அறிக்கையில் சம்பவமானது 13.02.2015 அன்று 21.45 மணிக்கு நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 14.02.2015 ம் தேதி 3.45 மணிக்கு திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்படி அதிகாலை அந்த மருத்துவமனைக்கு சென்று கோமதியின் புகார் வாக்குமூலத்தை பெற்றேன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றைய தேதியில் காலை 5.30 மணி முதல் 6.30 மணிவரை நான் புகார் வாக்குமூலம் பதிவுசெய்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்பு காலை 8 மணிக்கு நிலையத்திற்கு வந்து அந்த புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப முதல் தகவல் அறிக்கையை பதிவுசெய்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் சங்கரன்கோவில் நீதித்துறை நடுவரால் 16.02.2015 ம் தேதி காலை 10.30 மணிக்கு பெறப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கும், எனக்கு தகவல் கிடைத்ததாக குறிப்பிட்டுள்ள தேதிக்கும் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள தேதிக்கும் மேற்படி முதல் தகவல்அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்கும் இடையே காலதாமதம் உள்ளது என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் புகார் வாக்குமூலத்தை பதிவுசெய்யவில்லை என்றாலும், கோமதி என்பவரின் கையொப்பத்தை

வெள்ளைத்தாளில் பெற்றுக்கொண்டு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தை உற்பத்தி செய்தேன் என்றாலும் அதன் அடிப்படையில் பொய்யாக வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**